1972 ஆகஸ்ட் 22]

சேலம் நகராட்சி மன்றம்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம் நகராட்சி மன்றத்தின் உறுப்பினர்கள் பலர் 1972 பிப்ரவரி 25 ஆம் நாள் அளவில் காவலர் உதவியுடன் மன்றத்திலிருந்து அகற்றப் பட்டனரா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 24—2—72-ம் தேதியன்று சேலம் நகராட்சி மன்றத்தலைவர் ஒரு உறுப்பினரால் மொழியப்பட்ட, மற்றொரு உறுப்பினரால் வழி மொழியப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தை தள்ளுபடி செய்ததாகவும், வேறு இரண்டு உறுப்பினர்கள் அத்தீர்மானத்தை ஓட்டுக்கு விடும்படியாகக் கேட்டு மன்றத்தின் நடவடிக்கைகளை தடுத்ததாகவும், தலைவர் காவல்துறையின் உதவியால் அவ்விரண்டு உறுப்பினர்களையும் மன்றத்திலிருந்து வெளியேற்றியதாகவும் கூறப்படுகிறது.

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : தலைவர் அவர்களே, அங்கத்தினர் அந்தஸ்து பாதிக்கப்படுவதால், இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் போலீஸ் தலையிடாதிருப்பது நல்லது. ஆகையினால் போலீஸ் தலையீட்டை அரசு தவிர்க்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒரு சபையின் நடவடிக்கைளைக் கவனிக்கும் முழுப் பொறுப்பும் சபையின் தலைவருக்கு வருகிறது. ஆனால் சட்டப்படி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருகிறார்கள். தலைவர் தனக்குள்ள அதிகாரத்தை வைத்து அத்தீர்மானத்தை நிராகரித்தார். அதை ஓட்டுக்கு விடவேண்டுமென்று உறுப்பினர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். அது மறுக்கப்படவே, மேலும் சபை நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்படுகிற நிலையில் அவர்கள் செயல்படவே காவல் துறையினர் உதவியை சபைத் தலைவர் நாடுவதன் அவசியம் ஏற்பட்டது. அதற்குப் பிறகும் அந்த இடத்தைவிட்டு நகர மறுத்து விட்டார்கள். அதன் பிறகு நாற்காலியோடு சேர்த்து தூக்கி வெராண்டாவில் இறக்கி விட்டுவிட்டு நாற்காலியை மட்டும் உள்ளே கொண்டுவந்தார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது.

Memorial for Thilagavathiar

* 179 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether the Government will take steps to erect a Memorial at Thiruvathigai, where Thilagavathiar lived and rendered divine services?

திலகவதியாருக்கு நினைவுச் சின்னம்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

திகலவதியார், திருவதிகையில் தங்கி திருத்தொண்டு செய்த இடத்தில் நினைவுச் சின்னம் அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அம்மாதிரியான திட்டம் ஏதும் இல்லை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவர் அவர்களே, அப்படி ஒரு ஏற்பாடு செய்யும்படி பரிந்துரை செய்ய இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் தொல்பொருள் ஆராய்ச்சி பயன்படுகிற வகையிலும் பாழடைந்து காணப்படுகிற பொருள்களைக் காப்பாற்றுகிற வகையிலும் வரலாற்றுச் சிறப்புப் பொருந்திய அத்தகைய இடங்களைக் காப்பாற்றுகிற தன்மைகளில் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். இப்படிப்பட்ட துறையை தொல் பொருள் ஆராய்ச்சித் துறை ஏற்றுக்கொள்ளவில்லை. சாதாரணமாக இந்தப் பணிகளை மடங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். தர்மபுரம் மடமோ, மாண்புமிகு குன்றக்குடி அடிகளார் மடமோ அந்தப் பொறுப்பை ஏற்று நடத்தலாம் என்பது தான் அரசின் விருப்பம்.

திரு. ம. பொ. சிவஞானம்: திலகவதியார் சைவசமயத்தைச் சார்ந்தவர். ஆதலால் சைவ சமய மடமே முன்வந்து இந்த மாதிரிச் சிலைகளை வைப்பது நல்லது என்று சமய சார்ப்பற்ற அரசு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது. அதைத்தான் கல்வி அமைச்சர் சொன்னார்கள். அதைவிடவும் தெய்விகப் பேரவை ஒன்று அமைந்திருக்கிறது. அதன் தலைவர் இதில் அக்கறை உள்ளவராதலால் அவரையே முயற்சி எடுக்கத் தூண்டுமா?

1972 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்கள் கருத்தைத் தான் நான் குறிப்பிட்டேன். இப்படிப்பட்ட இடங்கள் காப்பாற்றப்படுகிற முயற்சி பலவகைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அந்த முறையில் சைவ மடங்கள் முன்வந்து இப்படிப்பட்ட சைவ சமய வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இத்தகைய இடங்களைக் காப்பாற்றுகிற முயற்சிகளை மேற்கொள்ளலாம். அதில் அறநிலைய பாதுகாப்புத் துறை கவனம் செலுத்தும்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, திலகவதியாரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். திருவதிகை எங்கிருக்கிறது என்று தெரியாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பன்ருட்டிக்குப் பக்கத்தில் ஒரு மைலில் உள்ளது.

Memorial for Thirugnanasambandar

* 180. *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether the Government will purchase the house at Sirkazhi, where Saint Thirugnanasambandar was born and erect a Memorial there?

திருஞான சம்பந்தருக்கு நினைவுச் சின்னம்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

திருஞான சம்பந்தர் பிறந்த சீர்காழியில் உள்ள வீட்டை அரசு வாங்கி நினைவுச் சின்னம் அமைக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அம்மாதிரியான திட்டம் எதுமில்லை

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் கூறியது போல், வேறு யாராவது செய்வதாக இருந்தால், அப்படிப்பட்ட இடத்தைத் தடையில்லாமல் எடுத்துக் கொடுப்பதில் அரசு உதவி செய்யுமா ?